www.ecourtsindia.com



**முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஈரோடு**

**O.S.No.276/2021**

**நாள் : 13.02.2024**

**சாட்சி இடைக்கால மனு எண்.1/23ல் 08.02.2024 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு படி மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.**

**வா.சா.2 (பாலகிருஷ்ணன்) (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

விஜயலட்சுமி எனக்கு எந்த வகையில் உறவினர் என்றால் உறவினர் அல்ல, ஒரே ஊர்க்காரர். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றாலும், வாதி அழைத்ததன் பேரில் சாட்சியமளிக்க வந்தேன் என்றாலும் சரிதான். வாதி கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி சொத்தினை கிரையம் வாங்கியதாக கூறியதன் அடிப்படையில் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி A.P.சுப்ரமணியம் எனக்கு தெரியுமா என்றால் நான் இடம் வாங்கியதன் மூலம் அவரைத் தெரியும். நான் கிரையம் வாங்கியதாக கூறும் சொத்திற்கும், 1, 2 பிரதிவாதிகள் பற்றுகை உத்தரவு பிறப்பித்துள்ளாரா என்றால் ஆமாம், என் மனைவி அது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் பிரதிவாதி, வாதி மற்றும் என் மனைவி பெயரிலுள்ள சொத்துக்கள் முன் ஜப்தி செய்துள்ளார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி சொசைட்டியில் கையாடல் செய்து விட்டதால் 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்துக்களை ஜப்தி செய்துள்ளார்கள். (சாட்சி அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறார்). 3ம் பிரதிவாதி கையாடல் செய்ததாக கூறப்படும் சொசைட்டி எது என்றால் சென்னிமலை, கொங்கு நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகும். 1, 2 பிரதிவாதிகள், 3ம் பிரதிவாதி



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED030004082021/truecopy/order-4.pdf

எவ்வளவு தொகை கையாடல் செய்துள்ளார், எதற்காக சொத்து பற்றுகை செய்யப்பட்டுள்ளது என்பது கேட்டேனா என்றால் இல்லை. 3ம் பிரதிவாதியை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் 3ம் பிரதிவாதியின் அதிகார முகவரிடம் சொத்தினை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கூறிய சங்கத்தில் 3ம் பிரதிவாதி என்ன பணி புரிந்தார் என்றால் காசாளராக இருந்தார் என்று தெரிந்து கொண்டேன். 3ம் பிரதிவாதி ரூ.2,98,63,285/- தொகை கையாடல் செய்துள்ளார் என்றாலும், அதற்காக ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அரசுக்கு சேரவேண்டிய தொகையை கையாடல் செய்துள்ளதால் 1, 2 பிரதிவாதிகளுக்கு சொத்துக்களை பற்றுகை செய்ய அதிகாரம் உள்ளது என்றாலும், நான் வாங்கிய கிரையம் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதியைப் பற்றி தெரியாமல் நான் வாங்கிய கிரையம் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED030004082021/truecopy/order-4.pdf